சுற்றுநிருபம்-16/95

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்.
உட்துறைமுக வீதி.
திருகோணமலை.
24.2.95.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்.

மத்தியஸ்த விசாரணையும் ஒழுக்காற்று விசாரணையும்:

எல்லா கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களும் மத்தியஸ்த விசாரணைக்கும் ஒழுக்காற்று விசாரணைக்குமுள்ள வேறுபாடுகளை நன்றாக அறிந்து கொள்வது அவசியமாகின்றது. மத்தியஸ்த விசாரணை என்பது கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் அநேகமாக ஒரு சங்கத்திற்கும் அங்கு பணிபுரியும் ஒரு ஊழியர்க்கும் உள்ள, குறிப்பாக சோர்வு பற்றிய பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கும் ஒரு நடவடிக்கையாகும். ஆனால் ஒழுக்காற்று விசாரணை என்பது சங்க ஊழியருக்கு எதிராக சங்கம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்திற்கமைவாகவும், அச்சட்-டத்தின் "கீழ் பிரசுரிக்கப்பட்ட விதிகளிற்கமைவாகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக நடாத்தப்படும் விசாரணையாகும்.

ஒரு கணிசமான தொகை சோர்வு ஏற்பட்டு விட்டதெனக் கூறியோ அல்லது அச்சோர்வு மத்தியஸ்த விசாரணைக்கு விடப்பட்டு விட்டதெனக் கூறியோ ஒரு சங்க ஊழியரை வேலை இடைநீக்கம் செய்வது முறையானதல்ல. அப்படிச் செய்து விட்டு பல சங்கங்கள் மத்தியஸ்த தீர்ப்பையோ, பின்பு அதன் மேன்முறையீட்டுத் தீர்ப்பையோ எதிர்பார்த்து பல வருடங்களாக ஊழியர்களை இடைக்கால வேலை நிறுத்தத்தில் வைத்த வண்ணம் காத்திருக்கின்றன. இவ்வாறு செய்வது ஒரு மிகப் பிழையான செயலாகும். ஒரு சில சங்கங்கள் மத்தியஸ்த தீர்ப்பு வழங்கும் வரை ஒழுக்காற்று விசாரணை நடாத்த முடியாதெனக் காத்திருக்கின்றன. இதுவும் ஒரு தப்பபிப்பிராயமாகும்.

ஒரு சங்க ஊழியருக்கெதிராக கணிசமான தொகை சோர்வு ஏற்பட்டால் அதனை மத்தியஸ்த விசாரணைக்கு விட்ட பொழுதிலும் அவருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது தான் முறையானதாகும். அச்சோர்வினை ஆரம்ப ஒழுக்காற்று விசாரணை மூலம் ஓரளவிற்கேனும் உறுதிப்படுத்திய பின்பு தான் அவரை இடைக்கால வேலைநிறுத்தம் செய்யலாம். பின்பு சங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணை உத்தியோகத்தரினால், முறையான ஒழுக்காற்று விசாரணையின் பின் தரப்பட்ட காண்புகளை ஆராய்ந்த பின் சங்கத்தினால் அவ்வூழியரை திரும்பவும் வேலைக்கமர்த்தவே நிரந்தர வேலைநீக்கம் செய்யவோ அல்லது வேறு தண்டனை ஏதும் வழங்கவோ முடியு

(............/2)

முன்பக்கத்தொடர்ச்சி:-

சங்கம் மத்தியஸ்த விசாரணையின் முடிவை காத்திருக்கத்தேவையில்லை. ஒழுக்காற்று விசாரணையின் பின் நிரந்தர வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒரு ஊழியரை பின்பு மத்தியஸ்த தீர்ப்பு அவருக்குச் சாதகமாக வழங்கப்பட்டுள்ளது என்னும் காரணத்தினால் மாத்திரம் திரும்பவும் வேலைக்கமர்த்த வேண்டுமென்னும் நியதியில்லை. ஆனால் மத்தியஸ்த விசாரணையின் காண்புகளை வைத்து ஒரு ஊழியரை தற்காலிக வேலை இடைநீக்கம் செய்வதோ நிரந்தர இடைநீக்கம் செய்வதோ முறையற்ற செயலாகும்.

ஆகவே சோர்வு சம்பந்தமாக ஊழியர்களை தற்காலிக இடைநீக்கம் செய்து வைத்திருக்கும் சங்கங்கள் உடனடியாக அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

ஆ. சுப்பிரமண்ய சர்மா,
செயலாளர்.

பிரதிகள்:-

1) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர். (வ.கி.மா)
2) வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்கள்/ பிரதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள்.

Circular-16/95

සමුපකාර සේවක කොමිෂන් සභාව,
උතුරු නැගෙනහිර පළාත,
ඇතුල් වරාය පාර, ත්‍රිකුණාමලය.
1995.02.24 වැනි දින.

උතුරු නැගෙනහිර පළාතේ සියළුම
සමුපකාර සමිතිවල සභාපතිවරුන් වෙත.

## තීරක පරීක්ෂණය සහ විනය පරීක්ෂණය.

සියළුම සමුපකාර සමිති නිලධාරීන් තීරක පරීක්ෂණය හා විනය පරීක්ෂණය අතර ඇති වෙනස්කම් මැනවින් දැන ගෙන සිටීම අවශ්‍යය. තීරක පරීක්ෂණය වනුයේ සමුපකාර පනත යටතේ බොහෝවිට සමිතියට හා එහි සේවය කරන සේවකයෙකුට අදාල විශේෂයෙන් ඌණතාවයක් හා සම්බන්ධ ප්‍රශ්ණයක් විසදීම සඳහා ගනු ලබන පියවරකි. එහෙත් විනය පරීක්ෂණය වූ කලී සමිතියක සේවකයෙකුට විරුද්ධව සමිතිය විසින් සමුපකාර සේවක කොමිෂන් සභා පනත හා එම පනත යටතේ නිකුත් කරන ලද ව්‍යවස්ථාවන්ට අනුකූලව විනයානුකූලව කටයුතු කිරීම සඳහා පවත්වනු ලබන පරීක්ෂණයක් වේ.

සැලකිය යුතු මුදල් ප්‍රමාණයක ඌණතාවයක් ඇතිවීමේ යෝ එම ඌණතාව තීරකකරණයට යොමුකර තිබීමේ හේතුන් මත සමිතියක සේවකයෙකුගේ වැඩ තහනම් කිරීම අවිධිමත්ය. එසේ කිරීමෙන් පසු බොහෝ සමිති තීරක තීන්දුවක් හෝ එහි අභියාචන තීන්දුවක් හෝ අපේක්ෂා කරමින් අවුරුදු කිහිපයක් තිස්සේ සේවකයින් අතුරු වැඩ තහනමට භාජනය කර බලා සිටිති. මෙසේ කිරීම ඉතා අයුතු ක්‍රියාවකි. ඇතැම් සමිති තීරක තීන්දුවක් ලැබෙන තෙක් විනය පරීක්ෂණය නොපවත්වා බලාපොරොත්තුවෙන් සිටිති. මෙයද වැරදි මතයකි.

සමිතියක සේවකයෙකුට විරුද්ධව සැහෙන තරම් මුදල් ප්‍රමාණයක ඌණතාවයක් ඇතිවුව-හො ත්, එය තීරකකරණයට යොමුකර ඇතත්, ඔහුට විරුද්ධව විනයානුකූලව කටයුතු කිරීම විධිමත් වන්නේය. එම ඌණතාවය මූලික විනය පරීක්ෂණයක් මගින් අර්ධ වශයෙන් හෝ තහවුරු කිරීමෙන් පසුවම ඔහු අතුරු වැඩ තහනමකට භාජනය කළ හැක. ඉන් අනතුරුව සමිතිය විසින් පත්කරන ලද පරීක්ෂණ නිලධාරියෙකු විසින් විධිමත් විනය පරීක්ෂණයක් පැවැත්වීමෙන් පසු එළඹි නිගමනයන් පරීක්ෂා කර බලා සමිතිය විසින් එම සේවකයා නැවත සේවයේ යෙදවීමු, ස්ථිර ලෙස සේවයෙන් පහකිරීම හෝ වෙනත් දඩුවම් පැනවීම හෝ කළ හැකි අතර, සමිතියක් තීරක තීන්දුව බලා සිටීමට අවශ්‍ය නැත. විනය පරීක්ෂණයෙන් පසු ස්ථිර ලෙස සේවයෙන් පහ කරන ලද සේවකයෙකුට වාසිදායක ලෙස තීරක තීන්දුවක් දී ඇති හේතුවෙන් පමණක් නැවත සේවයේ පිහිටුවිය යුතුයයි නියමයක් නැත. එහෙත් තීරක පරීක්ෂණයේ නිගමනයන් මත සේවකයෙකු තාවකාලික ලෙස හෝ ස්ථිර ලෙස හෝ වැඩ තහනමකට භාජනය කිරීම අහිසි ක්‍රියාවකි.

එමනිසා ඌණතාවයක් සම්බන්ධයෙන් වූ විට සේවකයින් තාවකාලිකව වැඩ තහනමට භාජනය කර ඇති සමිති වහාම ඔවුන්ට විරුද්ධව විනය පරීක්ෂණ පවත්වා කටයුතු කරන මෙන් ඉල්ලා සිටිනු ලැබේ.

කොමිෂන් සභාවේ නියමය පරිදි

ආ. සුබ්‍රමනිය ශර්මා,
ලේකම්.

පිටපත්:-

01. සමුපකාර සංවර්ධන කොමසාරිස්, උ.නැ.ප.
02. උතුරු නැගෙනහිර පළාතේ සියළුම ප්‍රාදේශීය ලේකම්වරුන්/
නියෝජ්‍ය සමුපකාර සංවර්ධන කොමසාරිස්වරු න්. - දැ.ගැ.ස.